தமிழ் இலக்கியங்களுடன் தொடர்புபட்ட காட்சி களை சித்தரிக்கும் கோட்டு ஓவியங்களில் அறப்பண்பும் மனிதநேயமும் – ஓவியர் சில்பியின் கோட்டு ஓவியங்களை மையமாகக்கொண்ட ஓர் ஆய்வு

வ. பாலமுருகன்
முதுநிலை விரிவுரையாளர், தலைவர் ஓவியத்துறை
யாழ்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

மலர்: 14

சிறப்பிதழ்: 1

மாதம்: செப்டம்பர்

வருடம்: 2026

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.5281/zenodo.23310108

ஆய்வுச்சுருக்கம்

பி.எம்.சீனிவாசன் (1919 – 1983) சில்பி எனும் பிரபல்யமான தமிழ் ஓவியர், இவர் பேனா மற்றும் மை கோட்டு ஓவியங்களில் பெயர் பெற்றவர். கோயிற் கட்டடங்களையும் கோயிற் சிற்பங்களையும் தனக்கான தனிப் பாணியில் வரைவதில் புகழ்பெற்றவர். இதனால் சில்பி எனப் பெயர் பெற்றார். இவரது தமிழ் இலக்கியங்களுடன் தொடர்புபட்ட காட்சிகளைச் சித்தரிக்கும் கோட்டு ஓவியங்களில் ஒழுக்கம், நீதி, போன்ற அறப்பண்புகளும் கருணை, அன்பு, இரக்கம் போன்ற மனிதநேயப் பண்புகளும் வெளிப்படுவதை அவதானிக்கலாம். இவர் கருப் பொருளைக் கட்டமைக்கும் விதம், ஊடகக்கையாளுகை மற்றும் இரேகைகளின் அசைவு அதனால் தோற்றுவிக்கப்படும் ஓத்திசைவு என்பவை எவ்வாறு இந்த அறப்பண்புகளையும் மனிதநேயப் பண்புகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றன என்பதை ஆராய்வதாக இந்த ஆய்வு அமைகின்றது. இந்த ஆய்வானது ஓவியரின் கோட்டு ஓவியங்களை ஆராய்ந்து விளக்குவதாக அமைவதால், இவ் ஆய்வானது விவரண ஆய்வின் அடிப்படையில் அமைந்து காணப்படும். இவரது கோட்டு ஓவியங்களின் பிரதிகள், நூல்கள், கட்டுரைகள் இணையத்தள தகவல்கள் என்பன ஆய்வு மூலங்களாக அமைகின்றன.

திறவுச்சொற்கள்: *கோட்டு ஓவியங்கள், ஓத்திசைவு, லயம், வெளிப்பாடு, ஒழுங்கமைவு*

ஆய்வு அறிமுகம்

சீனிவாசன் எனும் பெயர் கொண்ட ஓவியர் சில்பி ஆனந்தவிகடன் இதழில் தமிழ் கட்டடக்கலை, சிற்பக் கலைகளை கோட்டு ஓவியங்களாக வரைந்து புகழ் பெற்றவர். இதனால் பத்திரிகையின் மூத்த கலைஞரான மாலி இவருக்கு சில்பி என்ற பெயரை சுட்டினார்.[1] சில்பி தென்னிந்தியாவின் மூலைமுடுக்கெல்லாம் உள்ள கோயில்களுக்கு சுற்றுப் பயணம் செய்து பக்தர்கள் தரிசனத்தை முடித்த பிறகு இரவில் கோயில் சிற்பங்களின் கோட்டு ஓவியங்களை அந்த இடத்திலேயே வரைந்தார். பக்தர்கள் தங்கள் தெய்வங்களையும் தேவதைகளையும் வழிபடுவதற்காக இவரது ஓவியங்களைத் தங்கள் பூஜை அறையில் வைத்தார்கள்.[2]

காண்பியக் கலை என்பது பார்க்கக்கூடிய வடிவம் (Visual form) கண்ணுக்குத் தெரியாத சுழல் (Invisible context) மற்றும் முதன்மை உள்ளடக்கம் (Primary content) ஆகிவற்றைத் திறம்படக் கையாண்டு இரண்டாம் நிலை உள்ளடக்கத்தை (Secondary content) உருவாக்குவதாகும்.

அதாவது பார்வையாளனிடம் நேரடி அர்த்தத்திற்க்கு அப்பாற்பட்ட ஒரு செய்தியோ அல்லது தாக்கத்தையோ ஏற்படுத்துவதாகும்.[3] ஓவியர் சில்பி ஆலய கட்டடங்களையும் சிற்பங்களையும் ஓவியங்களாக வரைந்தாலும் அவை கோயிற் கட்டடங்கள், சிற்பங்கள் என்பதை தாண்டி ஓர் புதிய தரிசனமாகத் தந்திருக்கின்றார்.

வெளிப்படுத்த வேண்டிய மையக் கருத்துக்கு ஏற்ற வகையில் இரேகைவீச்சைக் கையாண்டு பொருத்தமான வெளிப்பாட்டை உருவாக்குகின்றார். இவர் வரைந்த கோட்டு ஓவியங்களில் தமிழ் இலக்கியங்களுடன் தொடர்பான காட்சிகளில் வெளிப்படும் ஒழுக்கம், நீதி போன்ற அறப்பண்டுபுகளும் கருணை, அன்பு, இரக்கம், காதல் போன்ற மனிதநேய பண்புகளும் வெளிப்படுவதை அவதானிக்கலாம். இதற்காக இவர் கையாண்ட நுட்பங்களும் அணுகுமுறைகளுமே இவருக்கான தனித்துவமான அடையாளமாக அமைந்துள்ளன.

சில்பியின் ஓவியங்களும் வெளிப்பாடும்



இது வாயு புத்திரர்களான அனுமனும் வீமனும் சந்திக்கும் காட்சியை சித்தரிக்கும் கோட்டோவியமாகும். வில்லி பாரதத்தில் ஆரணிய பருவத்தில் வரும் ஓர் காட்சியாகும். திரௌபதி கேட்ட சௌகந்திக மலரை தேடி வீமன் கந்தமாதன மலையை நோக்கிச் செ ல்லும்போது வழியில் ஒரு முதிய வானரம் பாதையின் இடையே தனது நீண்ட வாலை வழிமறித்துத் தூங்குகின்றது. பலசாலியான வீமன் அதைக் கண்டு ஒதுங்கிச் செல்லாது வாலை நகர்த்துமாறு அந்தக் குரங்கிடம் கூறுகின்றான். அனுமனாகிய அந்த வானரம் வந்திருப்பது தனது தம்பி என்பதை அறிந்த நிலையில் வீமனிடம் இருந்த அகந்தையை ஒழிக்க நினைத்தார். நான் முதியவன் என்னால் எனது வாலினை நகர்த்த முடியவில்லை நீயே நகர்த்திவிடு என்று கூறுகின்றார். வீமனும் அகந்தையுடன் தனது காடா தடியால் வாலை நகர்த்த முயல்கிறான். வீமன் தன்' முழு பலத்தையும் பிரயோகித்தும் அந்த வாலை நகர்த்த முடியவில்லை. தன் பலத்தை பற்றிய இறுமாப்பு அழிந்த வீமன் எதிரில் இருப்பது சாதாரண வானரம் அல்ல என்பதை உணர்ந்து கைகூப்பி தாங்கள் யார் என்று வணங்கிக் கேட்கின்றான். அனுமன் தன் உண்மையான உருவத்தைக் காட்டித் தானும் வாயுவின் மைந்தனே என்பதை வெளிப்படுத்தினார்.

முக்கோண அமைப்பில் ஒழுங்கமைக்கப்பட்ட இக்கோட்டோவியத்தில் வீமனின் உருவத்தின் புறவரை கோட்டின் (Out Line) லய ர்வமான வீச்சாலும் மேற்பரப்புக் கோடுகளின் (Conter Line) பொருத்தமான அமைவாலும் அவனது உடல் வலிமையை வெளிப்படுத்துகின்ற அதேவேளை முகத்தின் வெளிப்பாட்டின் மூலம் (Facial Expression) அவனது அகந்தையும் சிறப்பாக வெளிப்படுகின்றது. வீம உருவத்தின் அருகில் உள்ள சிறிய உருவமான அந்த வானரம் ஒரு அற்ப உருவமாக் காட்சி தரவில்லை. அந்த உருவம் கட்டமைக்கப்பட்ட விதத்தினாலும் இதன் முகத்தின். வெளிப்பாட்டினாலும் சகலதையும் அறிந்த நிலையில் உள்ள மகா சக்தி படைத்த ஓர் உருவம் என்பதை வெளிப்படுத்துகின்றது. இதன் மூலம் வீமனின் அகந்தை அழிந்து பணிவு எனும் அறப்பண்பு வலியுறுத்தப்படுகின்றது. மகா சக்கி படைத்தவராக அனுமன் விளங்கிய போதும்அகந்தை இல்லாது பணிவும் கருணையும் கொண்டவராக திகழ்பவர் என்பதை அந்த வானரத்தின் முக வெளிப்பாட்டின் மூலம் ஓவியர் விளக்குகின்றார்.

திருப்பரம் குன்றத்து ஆலயத்தில் இருக்கும் சிற்பங்களில் ஒன்று சிவபெருமான் பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுக்கும் கதை மதுரைப்

புராணத்தில் விவரிக்கப்பட்டுள்ள இந்தத் திருவிளையாடல்கள் பற்றிய சிலைகள் வேறெங்கும் இல்லை என்பது பாண்டிய நாட்டு சில்பிகளின் திறமைக்குக் சாட்சிகளாகும்.[4] இப்புராணக் கதை கூறுவதாவது பாண்டிய மன்னன் வேட்டையாடும்போது தாய்ப்பன்றியைக் கொன்றுவிடுகிறான். தாயை இழந்த குட்டிகள் பரிதவிக்கின்றன கருணா மூர்த்தியாகிய இறைவன் வராகமாக வந்து அப் பன்றிக் குட்டிகளுக்குப் பாலூட்டுகின்றார். சமச்சீர் சமநிலையில் அமைந்துள்ள இச்சிற்பத்தை சில்ப்பியின் இரேகை வீச்சுகள் உயிர்ப்படையச் செய்துள்ளதைக் காணலாம்.

பாலூட்டும் தாயின் ஆனந்தத்தையும் கருணையையும் கண்களிலும் முகத்திலும் வெளிப்படும் வகையில் முகத்தை மையப்படுத்தி இரேகைகள் கட்டமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கமுடிகிறது. குட்டிகள் மிகுந்த ஆர்வத்துடன் பால்குடிப்பதும் மடியை நோக்கி தாவுவதும் மிகுந்த உணர்ச்சி வெளிப்பாடுள்ள வகையில் காட்டப்பட்டுள்ளன. வராகத்தின் முகத்திற்கு அடுத்ததாக குட்டிகளின் அசைவுகள் வெளிப்படும் வகையில் பொருத்தமான இடங்களில் ஆழம் (Depth) காட்டப்படும் வகையில் இரேகைகள் காட்டப்பட்டு ஒளி, நிழல் கையாளுகை சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பார்வதியும் பரமேஸ்வரனும் ரிஷப வாகனத்தில் சென்றபோது ரிஷபம் தாகமாக இருப்பதை பார்வதி தெரிந்து கொள்கின்றார். தமது ரிஷபத்துக்கு தாகம் தணிக்க வேண்டும் என்பதாக நாயகனை வேண்டிக்கொண்டார். பரமேஸ்வரனும் தம் தலையிலுள்ள கங்கையை கையிலேந்திப் பிரவாகமாய் ஓடவிட்டார். ரிஷபத்தின் தாகம் தீர்ந்தது ஆனால் தமக்குத் தெரியாமல் ஓர் பெண்ணைத் தலை மேல் மறைத்து வைத்துக் கொண்டாரே என்று பார்வதி கோபம் கொண்டு தலையை திருப்பிக் கொள்கிறார்.

இறைவனும் தன் முகத்தை அவள் பக்கம் திருப்பி ஊடல் தீர்க்கமுயல்கின்றார். புராணக் கதையுடன் கற்பனையும் கலந்து ஓர் காதல் நாடக வெளிப்பாட்டுடன் இச்சிற்பம்[5] கோட்டு ஓவியமாகப் படைக்கப்பட்டுள்ளது. இறைவனின் முகத்தில் காதல் வெளிப்படும் வகையில் இரேகைகள் கட்டமைக்கப்பட்டுள்ளன. ரிஷபம் நீரருந்தும் முறையில் அதன் தாகத்தின் அளவை மதிப்பிடக் கூடியதாகவுள்ளது நீர் இறைவனின் கையிலிருந்து பிரவாகமாய் ஓடும் தன்மை மூலம் இறைவனின் ஜீவகாருண்யம் நன்கு வெளிப்படும் வகையில் லயபுர்வமான இரேகைக் கையாளுகை இடம் பெற்றுள்ளது.

தெற்கே தாமிர பரணித் தீர்த்தத்தில் உள்ள ஸ்ரீ வைகுண்டத்துக் கல்லாபிரான் கோயிலில் உள்ள இச்சிற்பம் இராமன் யுத்தச் சம்பந்தமாக அனுமன், சுக்கிரீவன், விபீஷணன் முதலானவர்களுடன் ஆலோசனை நடாத்தும் காட்சியாகும். இராமனின் இடது கையில் கோதண்டமும் வலது கையில் அம்புமாக யுத்த சம்பந்தமான ஆலோசனையில் இருப்பதாக அமைந்தாலும் இராமனுக்கே உரிய தெய்வீகத் தன்மை, அன்பு, கருணை எனும் பண்புகள்

வதனத்தில் வெளிப்படும் வகையில் இரேகைக் கையாளுகை அமைந்துள்ளது.

இராமன் அனுமனை அணைத்து நிற்பதனால் அனுமன் பக்திப் பரவசத்தினை அடைந்து நிற்பதும் இராமனுக்கு அருகில் சகலமும் அடங்கி ஒடுங்கி நிற்கின்ற பணிவும் நன்கு வெளிப்படுத்தப்படுகின்றது. இராமனின் முகத்தை மையப்படுத்திய வகையில் ஒளி நிழல் கையாளப்பட்டு இந்த ஒழுங்கமைப்பில் ஒத்திசைவு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இது திருவானைக்காவல் சுவாமி சன்னிதி "ஆலயம் செல்வது சாலவும் நன்று" என கொன்றை வேந்தன் எனும் தமிழ் இலக்கியத்தில் ஔவையார் கூறியுள்ளார். அந்த வகையில் ஆலயம் சென்று வழிபடுதலால் ஏற்படும் மன அமைதியையும் தெய்வீக அனுபவத்தையும் உணரக்கூடிய வகையில் இந்த சன்னிதியின் கோட்டு ஓவியம் விளங்குகின்றது. கட்டட அமைப்புக்குரிய கட்டுமான அம்சங்களைக் காட்டக்கூடிய வகையில் உறுதியான இரேகைக் கையாளுகை சிறப்பாக அமைந்து கட்டடத்தின் இயல்பையும் ஆழத்தையும் காட்டுகின்றது. மனித உருவங்களுக்கும் கட்டட அமைப்புக்குமான அளவுத்திட்டத்தின் மூலம் கோயில் அமைப்பின் பரந்த விசாலமான தன்மையும் உணர்தப்படுகின்றது. மேலும் ஒளி நிழல் கையாளுகை பொருத்தமான அசைவு என்பவற்றால்ஒத்திசைவும்தோற்றுவிக்கப்பட்டு, இப்புவுலகை நீங்கி இறையுலகில் சஞ்சரிப்பதான ஒரு தெய்வீக அனுபவத்தை தருவதாக இந்த கோட்டு ஓவியம் அமையப் பெற்றிருப்பது கலைஞனின் வெற்றியைப் பறைசாற்றுகின்றது.

முடிவுரை

ஓவியர் சில்பியின் கோட்டு ஓவியங்கள் ஆலய கட்டட அமைப்புகள், ஆலய சிற்பங்களை வெளிப்படுத்துவதில் தனித்துவம் வாய்ந்தவை. பொதுவாக சிற்பங்களின் அடிப்படையாக வரைபுகள் அமைந்திருக்கும். இங்கே சில்பியின் கோட்டு ஓவியங்களுக்கு அடிப்படையாக ஆலய கட்டடங்களும் சிற்பங்களும் அமைந்திருக்கின்றன. இவரது கோட்டு ஓவியங்கள் தனித்துவமான தரிசனத்தை தருவதாக அமைந்திருக்கின்றன. இவர் சிற்பங்களை அடிப்படையாக வைத்து தனது கோட்டு ஓவியங்களை வரைந்தாலும் ஓவிய மூலக்கூறுகளை கையாளும் விதத்தினால் அதன் வெளிப்பாட்டிற்கான உரிமையை தனதாக்கி கொள்கின்றார். வெளிப்பாட்டிற்கு ஏற்ற வகையில் ஓவியத்தை ஒழுங்கமைத்தல் இரேகை கையாளுகை ஒழிநிழல் கையாளுகை குவியப்புள்ளியை ஒழுங்கமைக்கும் விதம் போன்றவற்றின் மூலம் தனது ஓவியங்களிலே கருணை, அன்பு, இரக்கம், காதல் போன்ற மனிதநேய பண்புகளையும் ஒழுக்கம், நீதி போன்ற அறப் பண்புகளையும் பொருத்தமான முறையில் வெளிப்படுத்தி வெறும் வரைபுகளாக அல்லாமல் பெறுமதி வாய்ந்த ஓவியங்களாகப் படைத்துள்ளார்.

அடிக்குறிப்புக்கள்

1. https://share.google/5Oclj9wacWhaBoEPU
2. மேலது
3. Mike O Mahony. World Art the Essential Illustrated History, Page 15., 2006

4. சில்பி. தென்னாட்டுச் செல்வங்கள் (பாகம் I), பக்178.இ 2012
5. சில்பி. தென்னாட்டுச் செல்வங்கள் (பாகம் II), பக் 721.இ 2012

உசாத்துணை நூல்கள்

1. Mike O Mahony. (2012) World Art the Essential Illustrated History, Flame Tree Publishing
2. சில்பி. (2012) தென்னாட்டுச் செல்வங்கள் (பாகம் I)இ சென்னை. விகடன் பிரசுரம்
3. சில்பி. (2012) தென்னாட்டுச் செல்வங்கள் (பாகம் II), சென்னை. விகடன் பிரசுரம்
4. https://share.google/5Oclj9wacWhaBoEPU